<u>2026 ஜூன் மாதம் 25– ஆம் தேதி வியாழக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 131/2025</u>

2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW9 (LW15) – கருப்பையா |
| தகப்பனார் பெயர்: | முருகன் |
| ஊர்: | எரசைநாயக்கனூர் |
| வட்டம்: | உத்தமபாளையம் |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | கிராம நிர்வாக அலுவலர் |
| வயது : | 39 |

25.06.2026

(1 முதல் 3 எதிரிகள் ஆஜர். எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது பணியாளர் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், எரசைநாயக்கனூர் கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 15.06.2025 ம் தேதி உத்தமபாளையம், தெற்கு கிராமம், கிராம நிர்வாக அலுவலராக பணியிலிருந்தபோது, சுமார் காலை 6.30 மணியளவில் நானும், எனது உதவியாளர் திரு.மணிகண்டன் அலுவலகத்திலிருந்தபோது உத்தமபாளையம் உட்கோட்டம் காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் எங்கள் அலுவலகத்திற்கு நேரில் வந்து, உத்தமபாளையம் காவல்நிலைய குற்ற

எண்.150/2025 வழக்கு சம்பந்தப்பட்ட ஆஜர் 2 வது எதிரி ராஜேந்திரனை கைது செய்து, காவல்நிலையத்தில் வைத்திருப்பதாகவும், ஒப்புதல் வாக்குமூலம் பெறுவதற்கு சாட்சியாக எங்களை அழைத்தார்.

2. காலை 7.00 மணியளவில் நானும், எனது உதவியாளரும் உத்தமபாளையம் காவல்நிலையம் சென்றோம், அங்கு ஆஜர் 2 வது எதிரி ராஜேந்திரன் இருந்தார். காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் 2 வது எதிரியை விசாரித்தார். அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் பதிவு செய்தார். அதில் நாங்கள் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அதில் 2 வது எதிரி கையொப்பம் செய்தார். ஒப்புதல் வாக்குமூலத்தை கணினியில் பதிவு செய்து, பிரிண்ட் அவுட் எடுத்து, படித்துக் காண்பித்தார்கள்.

3. ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வது எதிரி ராஜேந்திரன் சுந்தர் என்பவரிடமிருந்து இடம் வாங்கி வீடு கட்டியதாகவும், வீட்டின் வடக்குப்புறத்தில் உள்ள காலியிடம் சுந்தர் என்பவருக்கு சொந்தமானது என்றும், அந்த இடத்தை அனுபவிப்பது சம்பந்தமாக இருதரப்பினருக்கும் பிரச்சனை இருந்ததாகவும், கடந்த 01.05.2025 ம் தேதி இரவு பிரச்சனை இருதரப்பினருக்கும் ஏற்பட்டது என்றும், 1 வது எதிரி பார்த்திபன், 2 வது எதிரி ராஜேந்திரன் மற்றும் 3 வது எதிரி விஜயா ஆகியோர்கள் கட்டை, இரும்பு ராடு, பட்டாக்கத்தி, கல் போன்ற பொருட்களால் தாக்கியதில், முத்துமாயன் சம்பவ இடத்தில் இறந்துவிட்டதாகவும், சுந்தர் தேனி, க.விலக்கு அரசு மருத்துமனையில் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாகவும், 2 வது எதிரி ராஜேந்திரன் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் 2 வது எதிரி ராஜேந்திரன் கையொப்பம் செய்தார். அதில் உள்ள முதலாவது கையொப்பம் என்னுடையதுதான். அது **அ.சா.ஆ.16** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என்னை காவல்துறை துணைக்கண்காணிப்பாளர் விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –</u>**

எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.

**<u>மறு விசாரணை</u>** :– இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.06.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI
Digitally signed by G SREE DEVI
Date: 2026.06.25 18:00:24 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.06.2026